# செய்திக் குறிப்பு

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் , 2009 பிரிவு 12(1) (c)– இன்படி அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு நுழைவுநிலை வகுப்புகளில் குறைந்த பட்சம் 25% இட ஒதுக்கீட்டின்படி சேர்க்கை வழங்கப்பட வேண்டும்.

அரசாணை (நிலை) எண் 60, பள்ளிக் கல்வித் (எக்ஸ்2) துறை, நாள் 01.04.2013 மற்றும் அரசாணை (நிலை) எண்: 59, பள்ளிக்கல்வி (பொநூ2) துறை, நாள் 12.05.2014 ஆகிய அரசாணைகளில் விரிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

2017–18 ஆம் கல்வியாண்டில் இவ்வகை சேர்க்கையை பெற இணையதளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். இதற்கான வசதி www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெற்றோர் அவரவர் இருக்கும் இடத்தில் இருந்தே இந்த இணையதளம் மூலமாக விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்ய முடியும். சேர்க்கை கோரப்படும் பள்ளியிலும் விண்ணப்பத்தினை இணையதளம் மூலமாக பதிவேற்றம் செய்யலாம். மேலும் அரசு இ–சேவை மையங்களிலும், மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் அலுவலகம், மாவட்டத்தொடக்கக்கல்வி அலுவலகம், உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம், அனைவருக்கும் கல்வி இயக்க வட்டார வள மைய அலுவலகங்கள் மற்றும் முதன்மைக்கல்வி அலுவலகம் ஆகிய அலுவலகங்களில் இணைய தளம் மூலம் பெற்றோர்கள் விண்ணப்பிக்க உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பெற்றோர்கள் உரிய சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களுடன் சென்று மேற்காண் இடங்களில் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்து கொள்ளலாம். விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரம் இணையதளத்தில் பதியப்பட்ட பெற்றோரின் கைபேசிக்கு குறுஞ்செய்தியாக அனுப்பப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி நர்சரி மற்றும் தொடக்கப்பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளில் மேற்காண் சேர்க்கை தொடர்பாக பள்ளிவாரியாக உள்ள இடங்களின் எண்ணிக்கை விவரத்தினை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது.

அரசின் இந்த சீரிய திட்டமானது மக்களிடையே சென்றடையும் வகையில் அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளிலும் பள்ளியின் பிரதான நுழைவு வாயிலில் சேர்க்கைக்கான இடங்களின் எண்ணிக்கை விவரத்தினை பொதுமக்களுக்கு நன்கு தெரியும் வகையில் பள்ளிப் பெயர் பலகைக்கு அருகில் 6"x10" அறிவிப்பு பலகை (flex Board) வைக்கப்படல் வேண்டும்.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட மாநில முதன்மைத் தொடர்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6 ந.க.எண் 1451 /அ1/2017, நாள் 12.04.2017 –ன் படி 2017–18 ஆம் கல்வியாண்டில் இவ்வகை சேர்க்கை தொடர்பாக கீழ்காணும் அட்டவணை பின்பற்றப்பட உள்ளது.

| வ.எண் | விவரம் | நாள் |
|---|---|---|
| 1 | 25% இடஒதுக்கீட்டின்கீழ் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகள் விண்ணப்பங்களை வரவேற்றுப் பள்ளித் தகவல் பலகையில் வெளியிட வேண்டிய நாள் | **15.04.2017** |
| 2 | இணைய வழியாக விண்ணப்பிக்க | **20.04.2017 முதல் 18.05.2017 வரை** |
| 3 | தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர் விவரம் / தகுதியில்லாத விண்ணப்பதாரர் விவரம் நிராகரிக்கப்பட்டதற்கான காரணத்துடன் பள்ளித்தகவல் பலகையில் வெளியிடப்படவேண்டிய நாள் | **22.05.2017** |
| 4 | தகுதியான விண்ணப்பங்கள் 25% ஒதுக்கீட்டில் நிர்ணயிக்கப்பட்ட இடங்களைவிடக் கூடுதலாக இருந்தால் குலுக்கல் முறையில் தேர்வு செய்ய வேண்டிய நாள் | **23.05.2017** |
| 5 | தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மற்றும் ஒவ்வொரு பிரிவிற்கும் 5 இடங்கள் கொண்ட காத்திருப்புப் பட்டியல் ஆகிய விவரங்கள் விண்ணப்ப எண்ணுடன் பள்ளித் தகவல் பலகையில் வெளியிட வேண்டிய நாள் | **24.05.2017** |
| 6 | நிர்ணயிக்கப்பட்ட படிவம் 5–ல் சேர்க்கை வழங்கப்பட்ட விவரத்தினை மாவட்ட அளவிலான அலுவலருக்குப் பள்ளி அளிக்க வேண்டிய நாள் | **29.05.2017** |

25% ஒதுக்கீட்டின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் ஒதுக்கீட்டு எண்ணிக்கையை விட குறைவாக விண்ணப்பங்கள் பெறப்பட்ட பள்ளிகளில் பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்து தகுதியுள்ள அனைவருக்கும் உடன் சேர்க்கை அளிக்க வேண்டும். சேர்க்கையின்போது கட்டணங்கள் ஏதும் வசூலிக்கக் கூடாது.

நிர்ணயிக்கப்பட்ட இடங்களுக்கும் மேலாக விண்ணப்பங்கள் பெறப்பட்ட பள்ளிகளில் இவ்வகைச் சேர்க்கைக்கு குலுக்கல் முறையில் மாணவ/ மாணவியர் தேர்வு செய்யப்பட வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட நாள், நேரம் மற்றும் இடத்தில் அனைத்து அனைத்து பெற்றோர்கள், பள்ளிக் கல்வி மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் முன்னிலையில் முழுமையான வெளிப்படைத்தன்மையுடன் குலுக்கல் (RANDOM) முறையில் தேர்வு செய்து சேர்க்கை அளிக்க வேண்டும். சேர்க்கையின்போது எவ்விதக் கட்டணங்களும் வசூலிக்கக் கூடாது. வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள ஆதரவற்றோர் / எச்.ஐ.வி.– ஆல் பாதிக்கப்பட்டவர் / மூன்றாம் பாலினத்தவர் / துப்புறவுத் தொழிலாளியின் குழந்தை / மாற்றுத் திறனாளிகள் போன்றோரிடமிருந்து பெறப்பட்ட தகுதியான விண்ணப்பங்களுக்கு குலுக்கல் நடத்துவதற்கு முன்னரே சேர்க்கை வழங்கப்பட வேண்டும்.

25% ஒதுக்கீட்டின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் ஒதுக்கீட்டு எண்ணிக்கையை விட குறைவாக விண்ணப்பங்கள் பெறப்பட்ட பள்ளிகளில் பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்து தகுதியுள்ள அனைவருக்கும் உடன் சேர்க்கை அளிக்க வேண்டும். சேர்க்கையின்போது கட்டணங்கள் ஏதும் வசூலிக்கக் கூடாது.

சேர்க்கை கோரும் மாணாக்கரின் இருப்பிடத்திலிருந்து ஒரு கி.மீ. சுற்றளவில் அரசுப்பள்ளி, அரசு உதவி பெறும் பள்ளி இருப்பினும் அம்மாணாக்கர் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளியில் RTE சட்டப்படி சேர்க்கை கோரும் போது சேர்க்கை மறுக்கப்படாமல் வழங்கப்பட வேண்டும்.

பெறப்பட்ட விண்ணப்பங்களில் 25% ஒதுக்கீட்டிற்கு தகுதியானவை மற்றும் நிராகரிக்கப்பட்ட விவரங்களை பதிவேட்டில் பராமரிப்பதுடன் அவ்வாறு நிராகரிப்பு செய்யப்பட்டதற்கான காரணங்களை குறிப்பிட்ட தேதியில் பள்ளித் தகவல் பலகையில் தெரிவிக்கப்படல் வேண்டும்.

மேற்காண் அறிவுரைகளை சம்பந்தப்பட்ட பள்ளிகள் தவறாது பின்பற்றி 2017–18 ஆம் கல்வியாண்டில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் , 2009 பிரிவு 12(1) (C) இன்படி அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு நுழைவுநிலை வகுப்புகளில் 25% ஒதுக்கீட்டில் 100% சேர்க்கையினை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பொதுமக்கள் இந்த வாய்ப்பினை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக இடர்பாடுகள் ஏதேனும் இருப்பின் மெட்ரிக் பள்ளிகள் எனில் மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் அலுவலகத்தையும், நர்சரி பள்ளிகள் எனில் மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலகத்தையும் தொடர்பு கொள்ளலாம்.

# 25% இட ஒதுக்கீட்டின்படி சேர்க்கை தொடர்பான கூடுதல் விவரங்கள்

## தனியார் பள்ளிகளில் 25% இட ஒதுக்கீடு – வழிகாட்டுதல்கள்

**இறுதி நாள் – மே 18**

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, சட்டப் பிரிவு 12(1)(சி) ன் கீழ் 2017–2018ஆம் கல்வியாண்டு முதல் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் 25% ஒதுக்கீட்டில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் சேர்க்கைக்கு இணையதளம் வழியே விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1. விண்ணப்பிப்பதற்கான வசதி www.dge.tn.gov.in என்ற இணைய தளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெற்றோர்கள் அவரவர் இருக்கும் இடத்தில் இருந்தே இதற்கான விண்ணப்பங்களை இணையதளத்தில் நேரடியாக பதிவேற்றம் செய்யலாம்.
2. இணையதளத்தில் தனியாக USER ID மற்றும் PASS WORD தேவையில்லை
3. மே 18ம் தேதி வரை இணைய வழியில் விண்ணப்பிக்கலாம்.
4. 25% ஒதுக்கீட்டில் சேர்க்கை கோருபவர்கள் கண்டிப்பாக இணையதளம் வழியாக மட்டுமே விண்ணப்பிக்க முடியும்

### விண்ணப்பம் பதிவேற்றம் செய்யும் இடங்கள்

- முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம்
- மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகம்
- மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகம்
- மாவட்டக் கல்வி அலுவலர்அலுவலகம்
- உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகம்
- அனைவருக்கும் கல்வி இயக்க வட்டார வள மைய அலுவலகம்
- அரசு இ–சேவை மையங்கள்

### பதிவேற்றம் செய்யத் தேவையான சான்றிதழ்கள்

பின்வரும் ஆவணங்களை பதிவேற்றம் செய்யும் பொழுது கொணர வேண்டும்.

1. குழந்தையின் ஒளிப்படம் (Photo)

2. பிறப்புச் சான்று (பின்வருனவற்றுள் ஏதாவது ஒன்று)
    - பிறப்புச் சான்று (Birth Certificate)
    - மருத்துவமனை உதவியாளர் மற்றும் மருத்துவச்சிப் பதிவேடு நகல் (Hospital Auxiliary and Midwife register )
    - அங்கன்வாடி பதிவேடு நகல் (Anganwadi record )
    - பெற்றோர் அல்லது பாதுகாவலர் குழந்தையின் பிறந்த தேதி குறித்து வழங்கிய உறுதி மொழி (Declaration through an affidavit of the age of the child by the Parent / Guardian)

3. இருப்பிடச் சான்று (ஏதேனும் ஒன்று)

    - குடும்ப அட்டை (Family Card )
    - வாக்காளர் அடையாள அட்டை (Voter ID)
    - ஆதார் அட்டை (Aadhar Card)
    - ஓட்டுநர் உரிமம் (Driving License)
    - வங்கி கணக்கு புத்தகம் (Bank Passbook)
    - தொலைபேசிக் கட்டண ரசீது (Telephone Bill )
    - வருமான வரி நிரந்தரக் கணக்கு எண் அட்டை (PAN Card)
    - இருப்பிடம் சார்ந்து கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று (Certificate of Residence issued by VAO)
    - மாநில அரசு/ மத்திய அரசு/ பொதுத்துறை நிறுவனங்கள் வழங்கிய அடையாள அட்டை (ID card issued by State Government/ Central Government/ Public Sector Undertaking)

4. பிற சான்றுகள் (ஏதேனும் ஒன்று)

    - நலிவடைந்த பிரிவில் சேர்க்கை கோருபவர்களுக்கு
        - வருமான சான்று
    - வாய்ப்பபு மறுக்கப்பட்ட பிரிவில் சேர்க்கை கோருபவர்களுக்கு
        - சாதிச் சான்றிதழ்
    - வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவில் சேர்க்கை கோருபவர்களுக்கு
        - ஆதரவற்றவர் / எச்.ஐ.வி ஆல் பாதிக்கப்பட்டவர் / மூன்றாம் பாலினத்தவர் / மாற்றுத் திறனாளிகள் / துப்புரவுத் தொழிலாளியின் குழந்தை எனில் அதற்கான சான்று